**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, மதுராந்தகம்**

**முன்னிலை:– திருமதி.N. வள்ளியம்மா, B.Sc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண் 1, மதுராந்தகம்**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ம் நாள் வியாழன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 09/2024**

**CNR. No. TNCG-15-000083-2024**

| | |
|---|---|
| அரசுக்காக.<br>காவல் ஆய்வாளர்<br>ஜி1 மதுராந்தகம் காவல் நிலையம்,<br>காவல் நிலைய குற்ற எண்.41/2023,<br>சட்டப்பரிவு 279, 304 A IPC | குற்றமுறையீட்டாளர் |
| எதிரிடை | |
| தமிழரசன் (எ)தீனா, வயது.22, த/பெ.ஜகநாதன்,<br>அம்பேத்கர் நகர், மேல்மலையனூர் கிராமம்,<br>செய்யூர் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். | எதிரி |

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு ROC. No. 814/2020/RG/F1, Dt 07.04.2021 இன் படியான இவ்வழக்கின் விவரங்கள் கீழ்வருமாறு :–

| | |
|---|---|
| Name of the Court | Judicial Magistrate No. I, Madurantakam. |
| Name of the Judge | Tmt.N,Valliamma, B.Sc., B.L., |
| Date of Judgment | 09.06.2026 |
| Case Number along with CNR Number | C.C. 09/2024<br>CNR. No. TNCG-15-000083-2024 |
| Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Maduranthagam PS.<br>**Complainant** |
| | தமிழரசன் (எ)தீனா, வயது.22, த/பெ.ஜகநாதன், |

| | **Accused** |
|---|---|
| Date of Occurrence | 23.01.2023 |
| Date of Complaint | 24.01.2023 |
| Period of Remand | Released on Station Bail 04.02.2023 |
| Released on Bail | 04.02.2023 |
| Final Report in the Court | 31.08.2023 |
| Committal/Taken on File | 01.02.2024 |
| Questioning U/s.281 | 19.07.2024 |
| Results on Challenge before Superior Courts | – |
| Chief & Cross Examination | |
| Examination U/s. 351(1)(b) BNSS | 08.06.2026 |
| Abscondence of an Accused | – |
| Grant of Stay | – |

| **Witness** | **Chief** | **Cross** |
|---|---|---|
| PW1 | 02.01.2025 | 02.01.2025 |
| PW2 | 28.01.2025 | 28.01.2025 |
| PW3 | 28.04.2026 | 28.04.2026 |
| PW4 | 28.04.2026 | 28.04.2026 |
| PW5 | 28.04.2026 | 28.04.2026 |
| PW6 | 12.05.2026 | 12.05.2026 |
| PW7 | 02.06.2026 | 02.06.2026 |
| PW8 | 02.06.2026 | 02.06.2026 |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 08.06.2026 ஆம் தேதி அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பிற்காக திருமதி.M.நித்யா, அரசு உதவி

குற்றத்துறை வழக்கறிஞர் நிலை II அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பிரபாகரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பகரும்.

**தீர்ப்புரை**

**1.** இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

**2.** இவ்வழக்கின் புகார்தாரரான சாட்சி–1 கௌரி என்பவரது மகன் அரிஷ்குமார் என்பவரை எதிரி தீனா(எ)தமிழரசன் என்பவர் TN 19 BV 2975 என்ற பதிவெண் கொண்ட APRILIA என்ற இருசக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு மேலவளம்பேட்டை கிராமத்தில் இருந்து மேல்மருவத்தூர் நோக்கி சென்னை– திண்டிவனம் மார்க்கம் GST சாலை வழியாக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிக் கொண்டு சென்று 23.01.2023 ம் தேதி நள்ளிரவு சுமார் 00.10 மணியளவில் மதுராந்தகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கருங்குழி சாந்திமலர் ஏஜென்ஸி அலுவலக கட்டிடம் எதிரே திடீரென பிரேக் போட்டதால் மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்பக்க டயர் பஞ்சராகி சாலையில் இருவரும் விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் காயம் அடைந்த அரிஷ்குமார் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி 24.01.2023 ம் தேதி பகல் 01.20 மணியளவில் மரணம் அடைந்துள்ளார். எனவே அரிஷ்குமார் என்பவரின் இறப்பிற்கு காரணமான எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304A ன் கீழ் தண்டிக்கதக்கவர் என்று மதுராந்தகம் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3.** குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், வழக்கினை 01.02.2024 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில்

சென்றிருந்ததால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் குற்றப் பத்திரிகை மற்றும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 251ன் கீழ் எதிரியின் மீது இதச பிரிவுகள் 279, 304A IPC –ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் குறித்து எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு 254–ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**4.** அதன்படி குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் 12 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளனர். பட்டியல் சாட்சிகள் 8.செல்வி, 9.மணிகண்டன், 10.சுரேஷ்குமார், 11.ரமேஷ் ஆகியோர்கள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்களின் மூலமாக அ.சா.ஆ.1 முதல் 10 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரியிடம் BNSS பிரிவு. 351 (1) (b) ன் கீழ் 08.06.2026ம் தேதியன்று வினவிய போது எதிரி அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**6.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் போதுமான சாட்சியங்களுடன் தகு

நிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்?.

**தீர்வு:-**

**7.** அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 10 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசுத் தரப்பால் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் அதனால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்தார்.

**8.** அ.சா.1 இந்த வழக்கில் புகார் அளித்த நபர் ஆவார். மேலும் அவர் விபத்தில் இறந்து போன அரிஷ்குமார் என்பவரின் தாய் ஆவார். அ.சா.1 அளித்த புகாரில் தனக்கு 2 மகள் மற்றும் 1 மகன் உள்ளனர். மகன் அரிஷ்குமார் என்பவர் சென்னையில் கௌரிவாக்கம் SIVET காலேஜில் தற்போது III வது ஆண்டு BBA படித்து வருவதால், என் அம்மா வீட்டில் தங்கி எலப்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11 மற்றும் 12ம் வகுப்பு படித்தான். அவன் படிக்கும் போது மேல்மருவத்தூரை சேர்ந்த ஜனா என்பவருடன் பழகி நண்பனாகி உள்ளார். ஜெனாவின் அக்கா திருமணம் 23.01.2023ம் தேதி மேலவளம்பேட்டை SM மஹாலில் நடக்க இருந்தது. அந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள என் மகன் அரிஷ்குமார் நண்பர்கள் உடன் 22.01.2023ம் தேதி மேலவளம்பேட்டை SM மஹாலில் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துவிட்டு மேல்மருவத்தூர் செல்ல வேண்டி அவர் நண்பர்கள் ஜெனா, கோபால் ஒரு வண்டியிலும், என் மகன் அரிஷ்குமார், தீனா(எ)தமிழரசன் என்பவருடன் அவருக்கு சொந்தமான TN 19 BV 2975 என்ற ABRILIA என்ற இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு 23.01.2023ம் தேதி அதிகாலை 00.10 மணிக்கு சென்னை – திண்டிவனம் GST ரோடு கருங்குழி ஜங்சன் சாந்திமலர் மளிகை பொருட்கள் ஏஜென்ஸி கடை எதிரே என் மகன் சென்ற

இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற தீனா(எ)தமிழரசன் திடீரென பிரேக் போட்டதால் பின்பக்க டயர் பஞ்சராகி நிலைதடுமாறி இரண்டு பேரும் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் என் மகனுக்கு தலை, முகம், கைகள், கால்கள் உடம்பில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. வண்டியை ஓட்டிய தீனா(எ)தமிழரசனுக்கு தலை, முகம் முழுவதும் கைகள், கால்களில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. என் மகன் வந்த வண்டிக்கு பின்னால் வந்த அவர் நண்பர் ஜெனா, கோபால் மற்றும் அங்கு இருந்த பொதுமக்கள் என் மகனை தூக்கி ஆட்டோ மூலமும், தீனா(எ)தமிழரசன் ஜெனா இருசக்கர வாகனத்திலும் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சேர்த்து முதல் உதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்து என் அண்ணன் மகன் தமிழ்மணிக்கு தகவல் சொன்னார்கள். அவன் என்னிடம் தகவல் சொன்னான். நான் உடனே புறப்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு வந்து என் மகனை பார்த்தேன். எங்களுக்கு வேறு யாரும் உதவி இல்லாததால் நான் என் மகன் உடனே இருந்தேன். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி 24.01.2023 மதியம் 01.20 மணியளவில் என் மகன் அரிஷ்குமார் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். இந்த விபத்து சம்மந்தமாக நான் என் மகன் நண்பர்களை கேட்டு விசாரித்து விபத்து நடந்த இடத்துக்கு வந்து பார்த்துவிட்டு வந்து புகார் அளிக்கிறேன். இந்த விபத்து சம்மந்தமாக தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**9.** அ.சா.1 தனது சாட்சியத்தில் வழக்கில் இறந்துபோன ஹரிஷ் எனது மகன் ஆவார். கடந்த 23.01.2023 ம் தேதி எனது மகன் சென்னை உள்ள எனது உறவினர் வீட்டு திருமணத்திற்கு சென்றுவிட்டு அவரது நண்பர் தமிழரசு இருசக்கர வாகனத்தில் எனது மகனை ஏற்றிக்கொண்டு மேல்மருவத்தூர் போகும்போது கருங்குழி அருகே இருசக்கர வாகனத்தின் டையர் வெடித்து விபத்து ஏற்பட்டு விபத்தில் எனது மகன் தலை, கண்ணம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அவரது நண்பர்கள் ஜனா, கோபால் ஆகியோர் மருத்துவமனைக்கு அழைத்து சென்று மேல் சிக்ச்சைக்காக அழைத்துச்சென்றார்கள். நான் செங்கல்பட்டு

மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது 24.01.2023 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** அ.சா.1 ன் வாய்மொழி சாட்சியத்தை கவனமாக பரிசீலனை செய்ததில் அ.சா.1 விபத்து சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி இல்லை என்பது தெரியவருகிறது.

**11.** மேற்படி விபத்து சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக பட்டிலியடப்பட்டுள்ள அ.சா.2 தனது சாட்சியத்தில் 23.01.2023 ம் தேதி இரவு 11.00 மணிக்கு எனது அக்காவிற்கு கல்யாணம் சம்மந்தமாக படாளத்தில் உள்ள மண்டபத்திற்கு நான் இருசக்கர வாகனத்தில் சென்றபோது போன் வந்தது எனது நண்பர் ஆஜர் எதிரியும் வழக்கில் இறந்துபோன ஹரிஷ்–வும் இருசக்கர வாகனத்தில் கருங்குழி அருகே சென்றபோது பின் சக்கரம் பஞ்சர் ஆகி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது இரண்டுபேருக்கும் அடிபட்டிருந்தது. காயம் பட்டவர்களை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். பின்னர் ஹரிஷ் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12.** விபத்து சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.7 ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 22.01.2023 ம் தேதி இரவு 12.00 மணிக்கு மேலவளம்பேட்டை SM மகாலில் திருமண நிகழ்ச்சியை முடித்துவிட்டு ஹரிஷ்குமாரும், ஆஜர் எதிரியும் இருசக்கர வாகனத்திலும், நானும் ஜனா என்பரும் வேறொரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம். அப்போது கருங்குழி அருகே ஆஜர் எதிரி ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் திடீரென்று பிரேக் பிடிக்கும்போது டயர் வெடித்து விபத்து ஏற்பட்டது. நாங்கள் பின்னால் வந்தோம் அப்போது சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். அந்த விபத்தில் ஆஜர் எதிரிக்கு பல் உடைந்து வாய் முழுவதும் ரத்தமாக இருந்தது. ஹரிஷ்குமாருக்கு வலிப்பு வந்துவிட்டது. நாங்கள் காயம்பட்ட நபர்களை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக 108

ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். 25.01.2023 ம் தேதி ஹரிஷ்குமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்மந்தமாக ஹரிஷ்குமாரின் அம்மா புகார் கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** மேற்கண்ட வழக்கு விபத்து சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக பட்டியலிடப்பட்டுள்ள அசா2 தன்னுடைய வாய்மொழி சாட்சியத்தில் வழக்கு விபத்து பற்றி தகவல் அறித்து சம்பவ இடம் சென்று பார்த்தாக சாட்சியம் அளித்துள்ளனர். அதே போல் அசா7 எதிரியும் விபத்தில் இறந்து போன ஹரிஷ்குமார் என்பவரும் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்னே சுமார் 400 மீட்டர் இடைவெளியில் சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அசா2 மற்றும் அசா7 ஆகிய இருவருமே விபத்து சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் இல்லை என்பது தெரியவருகிறது. மேலும் அவர்கள் இருவருமே இருசக்கர வாகனத்தின் டயர் வெடித்து விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளனர்.

மேலும் இந்த வழக்கின் புகார்தாரரான அசா1, அடிப்பட்ட நபர்களை மருத்துவமனையில் கொண்டு சேர்த்த அசா2 மற்றும் அசா3 ஆகிய 3 சாட்சிகளும் இந்த வழக்கின் எதிரி இருசக்கர வாகனத்தை அதிவோமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ ஓட்டியதாகவும் அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. இந்த நிலையில் இந்த வழக்கின் எதிரி வாகனத்தை அதிவேகமாகவோ அல்லத அஜாக்கிரதையாகவோ தான் வாகனத்தை ஓட்டடினாரா அதானல் தான் வழக்கு விபத்து சம்பவம் ஏற்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது.

**14.** மேலும் அ.சா.3 மற்றும் 6 இந்த வழக்கில் இறந்த அரிஷ்குமாரின் பிரேதத்தின் மீது போலிசார் பிரேத விசாரணை செய்ததை பொறுத்து சாட்சியம் அளித்துள்ளனர். அதே போல் அ.சா.4 மற்றும் 5 இந்த வழக்கில் போலிசார் சம்பவ இடம் வந்து வரைபடம் வரைந்து விசாரணை செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளனர்.

**15.** அ.சா.8 ஆன இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கில்

அவர் மேற்கொண்ட புலன் விசாரணையை பற்றி விரிவாக சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவண சாட்சியங்களை கவனமாக பரீசிலனை செய்ததில், வழக்கு விபத்து சம்பவமானது 23.01.2023 அன்று நள்ளிரவு சுமார் 00.10 மணியளவில் நடந்துள்ளது. மேற்படி விபத்தானது தேசிய நெடுஞ்சாலையில் நடந்துள்ளது என்பது அ.சா.ஆ.5 மற்றும் 6ன் மூலம் தெரியவருகிறது. பொதுவாக தேசிய நெடுஞ்சாலையில் பல வாகனங்கள் தொடர்ச்சியாக செல்ல கூடும். எனவே தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படும் விபத்தை பொறுத்து விசாரணையானது உடனடியாக துவங்கப்படவில்லையெனில் வழக்கில் தொடர்புடைய முக்கிய சாட்சியங்கள் அழிந்துவிடக் கூடிய நிலை ஏற்பட அதிகமான வாய்ப்புகள் உள்ளது. இந்த வழக்கில் 23.01.2023 அன்று ஏற்பட்ட வாகன விபத்தை பொறுத்து அ.சா.1 24.01.2023 அன்று பகல் 16.00 மணியளவில் தான் புகார் கொடுத்துள்ளார். அதன் பின்னர் அ.சா.8 24.01.2023 அன்று மாலை 17.00 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்துள்ளார்.

**16.** மேலும் இந்த வழக்கில் விபத்தில் ஈடுபட்ட வாகனத்தையும் சுமார் 168 நாள்கள் காலதாமதத்துடன் மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எனவே விபத்தின் போது எதிரி ஓட்டி சென்றதாக கூறப்படும் வாகனம் என்ன நிலையில் இருந்தது என்று குறிப்பிட்டு எந்த கருத்தும் தெரிவிக்க முடியாது என மோட்டார் வாகன ஆய்வாளர் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி விபத்தில் ஈடுபட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்கு உட்படுத்த 168 நாள்கள் காலதாமதம் ஏற்பட என்ன காரணம் என்பதை பொறுத்து அரசு தரப்பில் எந்த விளக்கமும் இல்லை.

**17.** இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவண சாட்சியங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்களை ஒரு சேர பார்க்கையில் 23.01.2023 அன்று நள்ளிரவு 00.10 மணியளவில் இந்த வழக்கின் எதிரியும் அ.சா.1ன் மகனான ஹரிஷ் என்பவரும் சென்ற இருசக்கர வாகனத்தின் பின் டயர் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும், மேற்படி விபத்தில் எதிரிக்கும் வழக்கில் இறந்துபோன ஹரிஷ் என்பவருக்கும் உடலின் பல

பகுதிகளில் காயம் ஏற்பட்டு இருவரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு துரதிர்ஷ்ட வசமாக அ.சா.1ன் மகனான ஹரிஷ் என்பவர் இறந்துவிட்டார் என்பதும் தெரியவருகிறது. எனினும் மேற்படி விபத்து சம்பவமானது எதிரியின் அதிவேகத்தாலோ அல்லது அஜாக்கிரதையாலோ தான் ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் எந்தவித சாட்சியோ அல்லது சான்றாவணமோ இல்லை.

**18.** இதச பிரிவு 304A ன் படி வாகனத்தை அதிவேகமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ ஓட்டி அதன் மூலம் மனித உயிருக்கு இறப்பை ஏற்படுத்திய நபரை தான் தண்டிக்க முடியும். இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள விபத்து சம்பவம் எதிரியின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் தான் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**19.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்தபடி இவ்வழக்கின் எதிரி இதச பிரிவுகள் 279, 304(A)–ன் படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து Bharathiya Nagarik Suraksha Sanhita, 2023 பிரிவு 278(1)ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**20.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்கு சொத்து குறித்த உத்தரவு ஏதுமில்லை.

**21.** எதிரி எழுதி கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட

பின்னர், 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் நாள் புதன்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VALLIAMMA

Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.10 10:23:13 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மதுராந்தகம்.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:–**

| Prosecution Witness No. | List of Witness | Name of the Witness | Description |
|---|---|---|---|
| 1 | PW1 | கௌரி க/பெ.பொன்னுசாமி | Complainant |
| 2 | PW2 | ஜனா த/பெ.ஆறுமுகம் | Eye-Witness |
| 3 | PW3 | சங்கர் த/பெ.ஏழுமலை | Inquest -witness |
| 4 | PW4 | அரிகிருஷ்ணன் த/பெ.சங்கர் | Mahazar witness |
| 5 | PW5 | விக்னேஷ் த/பெ.வேலாயுதம் | Mahazar witness |
| 6 | PW6 | நந்தகோபால் த/பெ.வெங்கடாஜலபதி | Inquest -witness |
| 7 | PW7 | கோபாலகிருஷ்ணன் த/பெ.முருகன் | Eye-Witness |
| 8 | PW8 | தர்மலிங்கம் /காவல் ஆய்வாளர் | Investigating Officer |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் விபரம்:–**

| Exhibit No. | Description of the Exhibits | Proved by/ Attested by |
|---|---|---|
| Ex.P.1 | புகார் | PW–1 |
| Ex.P.2 | பார்வைமகசரில் உள்ள அ.சா.4 ன் 2 வது கையொப்பம் | PW–4 |
| Ex.P.3 | பார்வைமகசரில் உள்ள அ.சா.5 ன் 1 வது கையொப்பம் | PW–5 |

| | | |
|---|---|---|
| Ex.P.4 | முதல் தகவல் அறிக்கை | PW-8 |
| Ex.P.5 | பார்வைமகசர் | PW-8 |
| Ex.P.6 | மாதிரி வரைபடம் | PW-8 |
| Ex.P.7 | ஹரிஷ்குமார் பிரேத பரிசோதணை அறிக்கை | PW-8 |
| Ex.P.8 | ஹரிஷ்குமார் பிரேத விசாரணை அறிக்கை | PW-8 |
| Ex.P.9 | TN 19 BV 2975 என்ற ABRALA என்ற இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை | PW-8 |
| Ex.P.10 | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை | PW-8 |

,

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை.
எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை.
எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை.
எதிரி தரப்பு சான்று பொருள் :- இல்லை.

VALLIAMMA

Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.10 10:23:18 +0530

நீதித்துறைநடுவர்எண்.1,
மதுராந்தகம்.

**CC 09/2024**

**10.06.2026**

எதிரி ஆஜர். தீர்ப்பு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரி இதச பிரிவுகள் 279, 304A–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை Bharathiya Nagarik Suraksha Sanhita, 2023 பிரிவு 278(1)ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**JM No.I/MKM**